1 1 7 S t  S e m e s

# கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை

## கல்விப்பீடம்

## பட்டப்பின் படிப்பு கல்வி திப்புளோமாக் கற்கைநெறி – 2016/2017

முதலாம் பருவம்

## CU 502 கல்வியின் உளவியல் அடிப்படைகள்

நேரம்: 2 மணி 30 நிமிடங்கள்

---

பகுதி II

- **எவையேனும் விரும்பிய நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

(1) i. கல்வி உளவியல் என்றால் என்ன? கல்வி உளவியலில் உள்ளடங்கும் பிரதான பரப்புகளைப்பற்றி சிறுகுறிப்பு வரைக. **(8 புள்ளிகள்)**

ii. ஆசிரியரின் தொழில் விருத்திக்கு கல்வி உளவியல் பற்றிய அறிவானது பயன்படுமாற்றைபற்றி சுருக்கமாக விளக்குக. **(12 புள்ளிகள்)**

(2) i. 'பிள்ளை விருத்தி' என்றால் என்ன? **(5 புள்ளிகள்)**

ii. பிள்ளை விருத்தி தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கோட்பாடுகளை பட்டியற்படுத்துக. **(6 புள்ளிகள்)**

iii. நடு மற்றும் பின்பிள்ளைப் பருவத்தினரின் உடல் உடலியக்க, அறிகை மற்றும் சமூக மனவெழுச்சி விருத்தியின் இயல்புகளைப்பற்றி சுருக்கமாக விபரிக்குக. **(9 புள்ளிகள்)**

(3) i. ஜீன் பியாஜேயின் அறிகை விருத்திக் கொள்கையின்படி பிள்ளையின் அறிகை விருத்தியானது சூழலுடன் இடைவினைத் தொடர்பு கொள்ளும்போது நடைபெறும் தன்மயமாதல் மற்றும் தன்னமைவாக்கல் செயன்முறைகளினூடாக இடம் பெறுகின்றமையை உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. **(10 புள்ளிகள்)**

ii. கட்டிளமைப் பருவத்தினரின் அறிகை விருத்தி அம்சங்களை ஜீன் பியாஜேயின் கொள்கையில் குறிப்பிட்டவாறாக எடுத்துக் காட்டுக. **(10 புள்ளிகள்)**

(4) i. எண்ணக்கருவாக்கம் நடைபெறும் விதத்தினை புறவுருவப் படத்தின் உதவியுடன் எடுத்துக் காட்டுக. (8 புள்ளிகள்)

ii. வகுப்பறையில் புதிய எண்ணக்கருவொன்றினை கற்பிக்கையில் ஒரு ஆசிரியரினால் கையாளப்படும் உத்திகளை உதாரணத்தின் உதவியுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

(5) i. 'நடத்தை நிபந்தனைப்பாடு' தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள கற்றல் கொள்கைகள் இரண்டினைப் பற்றி விபரிக்குக. (10 புள்ளிகள்)

ii. முழுமையான புலக்காட்சி ஏற்படும் விதம்பற்றி கெஸ்டோல்ட்வாதிகளால் முன்வைக்கப்பட்ட கற்றல் கொள்கையில் கோட்பாடுகள் கற்றல் கற்பித்தலில் பயன்படுமாற்றை உதாரணங்களின் உதவியுடன் விளக்குக. (10 புள்ளிகள்)

(6) i. விசேட தேவையுடைய மாணவர்கள் வகைப்படுத்தப்பட்டிருக்கும் விதத்தினை எடுத்துக் காட்டுக. (4 புள்ளிகள்)

ii. விசேட தேவையுடைய மாணவர்களைப் பற்றிய அறிவானது ஒரு ஆசிரியருக்கு பயன்படுமாற்றை உதாரணங்களை அடிப்படையாகக் கொண்டு சுட்டிக் காட்டுக. (8 புள்ளிகள்)

iii. மீத்திறனுள்ள மாணவர்கள் அல்லது டிஸ்லெக்சியா மாணவர்களின் இயல்புகளைப்பற்றி கருத்துரைக்குக. (8 புள்ளிகள்)

*aaaaaaaa*